1974 மார்ச் 29]

மாண்புமிகு திரு. ப.உ.சண்முகம் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜி. ராமசாமி : திருப்பத்தூர் ஏரி மிகவும் பெரிய ஏரி. அந்த வெள்ளக் கால்வாய் ஜவ்வாது மலையிலிருந்து வருகிறது. அந்தப் பெரிய ஏரிக்கு அந்தப் பக்கத்திலுள்ள கால்வாயின் அருகில் உள்ள நிலங்களெல்லாம் விவசாயிகள் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கால்வாயை பழுது பார்த்தால் அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு உதவிகரமாக இருக்கும். அதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, நான் திருப்பத்தூர் சென்றிருந்தபொழுது அங்கத்தினர் என்னை அழைத்துக் கொண்டு போய் காண்பித்தார். ஆக்கிரமிப்புகள் அப்புறப்படுத்தப்பட வேண்டும், அந்த ஏரி தூர் வாரப்பட வேண்டும், ஆழப்படுத்தப்பட வேண்டும் என்று ஒத்துக் கொள்கிறேன். இதை அரசு பரிசீலிக்கும்.

இனாம் ஒழிப்புச் சட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட நிலங்கள்

*675 வினா—திரு. ச. சங்குமுத்து தேவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) இனாம் ஒழிப்புச் சட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலங்கள் குறித்த வழக்குகள் நீதிமன்றங்களில் முடிவுறா நிலையில் இருக்கும்போது, A. O. கோர்ட்டு, பயிரிடும் விவசாயிகளை நில வெளியேற்றம் செய்வது அரசுக்குத் தெரியுமா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு 1968 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைக்காரர்கள் (தனி விதித் துறைகள்) சட்டத்தின் கீழ் (தமிழ்நாடு சட்டம் 16/1968) கோடாரங்குளம் கிராமத்தில் பயிரிடும் குத்தகைக்காரர்கள் 29 பேர் 1968 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 20 ஆம் நாள் வரை சேரவேண்டிய குத்தகைப் பாக்கியைச் செலுத்தாததால் திருவாடுதுறை ஆதீனம் தாக்கல் செய்த மனுக்களின் பேரில் திருநெல்வேலியில் ரெவின்யூ நீதிமன்றமாகச் செயல்படும், நிலச் சீர்திருத்த அனுமதி பெற்ற அதிகாரி, அவர்களை வெளியேற்றுவதற்கான ஆணையை 1971 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 28 ஆம் நாளில் பிறப்பித்தார். இவர்களுள் பயிரிடும் 17 குத்தகைக் காரர்களைப் பொறுத்து வெளியேற்ற ஆணை 1971 ஆம் ஆண்டு செப்டெம்பர் திங்கள் 23 ஆம் நாளில் நிறைவேற்றப்பட்டது. இவர்களுள் 27 பேர், திருநெல்வேலி மாவட்ட நீதிமன்றத்தில் வெளியேற்ற ஆணையை எதிர்த்து சிவில் மறு விசாரணை மனுக்கள் தாக்கல் செய்துள்ளனர்.

இருவர் மறு விசாரணை மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை. 27 பேர்கள் தாக்கல் செய்த சிவில் மறு விசாரணை மனுக்கல் அனுமதிக்கப்பட்டதாக அனுமதி பெற்ற அதிகாரி மாவட்ட நீதிமன்றத்திடமிருந்து தெரிந்து கொண்டார். இதே காரணங்களுக்காக சிவந்திபுரம் கிராமத்திலும் 48 குத்தகைக்காரர்கள் மீது வெளியேற்ற ஆணையை அனுமதி பெற்ற அதிகாரி 1971 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 24 ஆம் நாளில் பிறப்பித்தார். வெளியேற்ற ஆணை செயற்படுத்தப்படவில்லை. குத்தகைக்காரர் எவரும் வெளியேற்றப்படவுமில்லை. பயிரிடும் இந்தக் குத்தகைக்காரர்களில் 40 பேர் வெளியேற்ற ஆணைக்கு எதிராக, திருநெல்வேலி மாவட்ட நீதிபதி முன் சிவில் மறு விசாரணை மனுக்கள் தாக்கல் செய்துள்ளனர். இவர்களுள் 17 பேரைப் பொறுத்த சிவில் மறு விசாரணை மனுக்கள் அனுமதிக்கப்பட்டன. எஞ்சியவர்களைப் பொறுத்த வரையில், 1381 ஆம் பசலிக்கு நடப்புக் குத்தகை செலுத்தியது பற்றிய தகவல்கள் கிடைக்காததால் ஆணைகள் இன்னும் பிறப்பிக்கப்படவில்லை.

திரு. ச. சங்குமுத்து தேவர்: ஏ. ஓ. கோர்ட்டு மூலம் எவிக்ஷன் செய்துள்ளவர்கள் சிவில் கோர்ட்டில் அப்பீல் செய்து, அவர்களுக்கு அனுகூலமானதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஏழை விவசாயிகள் அப்பீல் செய்ய முடியாமல், இன்னும் சில பேர்கள், கோடாரங்குளம், சிவந்திபுரம் கிராமம் மட்டும் அல்ல, பொட்டல்புதூர் போன்ற இன்னும் அநேக இடங்களில் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். ஏழை விவசாயிகள் கோர்ட்டிற்குப் போக முடியாத நிலையில் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். பட்டா யாருக்கு என்று முடிவு செய்யாமல் இருக்கும்பொழுது இதற்கிடையே இந்த நிலைமை ஏற்பட்டிருப்பதினால் சிலபேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு மீண்டும் நிலம் கிடைக்கக்கூடிய அளவிலே ஏதாவது திருத்தம் கொண்டு வர அரசு உத்தரவு பிறப்பிக்குமா? இது மாதிரி இனம் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட நிலங்களெல்லாம் பட்டா யாருக்கு என்று முடிவு செய்யாமல் இருக்கும்போது ஏ. ஓ. கோர்ட் எவிக்ஷன் செய்தது முறைதானா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: 1974 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 12 ஆம் நாளில் ஹைகோர்ட்டிலே ஏற்பட்ட உத்தரவின்படி "9 ஆவது பிரிவில் செய்து கொள்ளப்பட்ட விண்ணப்பம் நிலவரி ஏற்பாட்டு அதிகாரியால் முடிவு செய்யப்படும் வரை, 1972 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 7 ஆம் நாளுக்கு முன்னர் இருந்ததுபோல வாரம் பெறுவதற்கும் மேற்படி ஆதீனத்திற்கு உரிமை அளிக்கப்படவேண்டும். இதற்காக வாதியான திருவாடுதுறை ஆதீனம் ஒவ்வொரு பயிருக்கும் ஒரு ஆணையாளரை நியமனம் செய்யப் பெற உரிமை அளிக்கப்படவேண்டும் வழக்கில் குறிப்பிட்டுள்ள நிலங்கள், திருவாடுதுறை ஆதீனம் ரயத்துவாரி பட்டா பெற உரிமையில்லாத ரயத்து நிலங்கள் என்று நிலவரி ஏற்பாட்டு அதிகாரி கருதினால், பாதிக்கப்பட்ட கட்சிக்காரர்களால் தாக்கல் செய்யப்படக்கூடிய மேல் முறையீட்டில் மேல் முறையீட்டு நடுவர் மன்றம் பிறப்பிக்கக்கூடிய ஆணைகளுக்குட்பட்டு, இதில் கண்டுள்ள மேல் முறையீட்டாளர்கள், அந்நாள் முதற்கொண்டு வாதிக்கு குத்தகை அல்லது வாரம் செலுத்த வேண்டியதில்லை. மேலும் 1972 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 7 ஆம் நாளுக்குப் பின்னர் அரசுக்கு ஆதீனத்தால் ஏதேனும் வரி செலுத்தப்பட்டதாக மெய்ப்பிக்கப்படுமானால் அத் தொகை போக, எஞ்சிய வாரத் தொகையை விளைபொருளாகவோ அதன் மதிப்பாகவோ

1974 மார்ச் 29]

திரும்பிப் பெற அந்தந்த குத்தகைதாரர்கள் உரிமை உள்ளவராவர். இதற்காக இந்த வழக்கிலேயே தீர்ப்பை நிறைவேற்றுவதற்கான விண்ணப் பத்தை அவர்கள் தாக்கல் செய்யலாம். இதற்காக புதிய வழக்குத் தொடர வேண்டியதில்லை. இதற்கு மாருக, வழக்குத் தொடர்பான நிலங்கள் ஆதீனம் 9-வது பிரிவின் கீழ் ரயத்துவாரி பட்டா பெற உரிமை உள்ள தனி நிலங்கள் என, நிலவரி ஏற்பாட்டு அதிகாரி கருதினுல் அப்போது இந்த வழககின் டிக்ரி ஆணை தொடர்ந்து செயலில் இருக்கும். மேலும், மேல் முறையீடு அல்லது மற்றவகையில் ரயத்துவாரி பட்டா பெறுவதற்குத் தாங்கள் உரிமை உடையவர்கள் எனக் குத்தகைக்காரர்கள் மெய்ப்பிக்கும் வரையில் கட்சிக்காரர்களின் உரிமைகளுக்கு டிக்ரி ஆணை பொருந்தும்''.

எனவே, உயர் நீதிமன்றத் தீர்ப்பின்படி, பட்டா பெறுவதற்குத் தங்க ளுக்குள்ள உரிமையைக் குத்தகைக்காரர்கள் நிலவரி ஏற்பாட்டு அமைப்பு முன்பு மெய்ப்பிக்கும் வரையில், அவர்கள் ஆதீனத்திற்கு வாரம் கொடுத்து வரவேண்டியிருக்கும் என்று உத்தரவு இருக்கிறது. அந்த உத்தரவின் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. சட்டப் பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. சட்டத்தின் மூலமாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். ஏற்கனவே கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் பேரில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் உறுதி கொடுத்திருக்கிறேன். இது ஒரு சிக்கலான பிரச்னை என்பதை உணர்கிருேம். எனவே திருநெல் வேலிக்கு நான் அடுத்த மாதம் வருகிற பொழுது நேரில் பேசி வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. கோவை செழியன் : இந்த இனும் சட்டம் பொதுவாக ஏழை விவசாயிகளைப் பாதிக்கின்ற வகையில் இருக்கிறது. குத்தகைதாரர் சட்டப் படி ஒரு ஆண்டு குத்தகை தந்தால் நிலம் குத்தகைதாருக்குச் சொந்தமாக ஆகிவிடுகிறது. இனும் சட்டப்படி 1900-ம் ஆண்டுக்கு முன்னுல் ரிகார்டு காட்டுகிறவர்களுக்குத்தான் பட்டா செய்து தருகிருர்கள். அதற்குப் பின்னுலே 30 வருஷத்திற்கு முன்னுலே வரையில் கண்டிஷன் பட்டா தருகிருர்கள். கண்டிஷன் பட்டா கூட ரூ. 10,000 மதிப்புள்ள பூமிக்கு லட்சம் ரூபாய் என்று நிர்ணயம் செய்து ஏழை விவசாயிகளை வெளியேற்று கிருர்கள். ஆகவே, இந்தச் சட்டத்தைத் திருத்த வேண்டும். அதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா? அதாவது ஏதாவது செலக்ட் கமிட்டி போட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இனும் பூமியைப் பொறுத்து ஏழைகளுக்குப் பாதகம் ஏற்படாத வகையில் ஆராயப்பட வேண்டும் என்று மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் தலைமையில் ஒரு சப் கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. அது பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இந்த இனும் ஒழிப்புச் சட்டத்தின் அடிப்படையில் சட்டம் நிறைவேற்றப்பட்ட உடனே குடிமக்களிட மிருந்து அரசாங்கம் நேரடியாக ரயத்வாரி முறையில் வசூலிக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. பல இடங்களில் வசூல் செய்வதில் தாமதம் ஏற் படுகிறது. அவர்கள் யாரிடம் கொடுப்பது என்று தெரியாமல் சிந்தித்துக்

கொண்டிருக்கிறபோது, நிலச் சொந்தக்காரர்கள் கோர்ட்டுக்குப் போகிறார்கள். அவர்களுக்குச் சாதகமாக உத்தரவைப் பெற்று, விவசாயிகளுடைய நெல், இதர வசூல்களை கோர்டுக்குக் கொண்டுபோய் விடுகிறார்கள் அதனால் அவர்கள் வாங்கிய கடனையும் கொடுக்க முடியாமல், குடும்பச் செலவுக்கும் வழியின்றி கஷ்டப்படுகிறார்கள் இந்தக் கொடுமையை ஒழிப்பதற்கு உடன டியாக ஒரு திருத்தச் சட்டத்தைக் கொண்டுவந்து சாகுபடியாளர்களுக்குச் சரியான பாதுகாப்பு அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நாம் நோடிபிகேஷன் செய்து, இனும் ஒழிப்புச் சட்டத்தைக் கொண்டு வந்தோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற தவறுகள் அதிலே வராது. அரசாங்கமே வசூல் செய்யும். நிலச் சொந்தக்காரர்கள் வசூலிக்க முடியாது. இப்போது ஏற்பட்டுள்ளது இடைக்காலத்தில் ஸ்டே வாங்கிவிட்டு, 65 முதல் 74-ம் ஆண்டு வரையில் ஸ்டே வாங்கிவிட்டு, கொடுமைப்படுத்துகின்ற நிலைமை உருவாகியிருக்கிறது. அதற்குச் சட்டத்திலே ஓட்டை இருக்கிறது. அந்த ஓட்டையை அடைப்பதற்குப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். விரை விலே திருத்தச் சட்டம் கொண்டுவரப்படும்.

Pine apple cultivation.

*676 *Q.*—THIRU R. R. MUNUSAMI : Will the **Hon. the Minister for Agriculture be pleased to state—**

(*a*) the places where pineapples are grown in this State ; and

(*b*) the incentives offered to the Pineapple growers in this State during the calendar year 1972 ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :

(அ) கன்னியாகுமரி, மதுரை, சேலம், மாவட்டங்களில் அன்னாசி பயிராகிறது.

(இ) 1972-ஆம் ஆண்டு சலுகை வழங்கப்படவில்லை.

திரு. அ. தேவேந்திரன் : தலைவரவர்களே, இந்த பைனாப்பிள் பயிரிடும் திட்டத்தைத் தஞ்சை மாவட்டத்தில் செயல்படுத்தினால் அதிகம் உற் பத்தியாகும் என்பது உண்மையா ? அப்படியானால் அங்கே பயிரிட இத் திட்டம் ஆரம்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தஞ்சை மாவட்டத்தைவிட தண்ணீர் வசதி குறைவாக உள்ள வேறு பல மாவட்டங்கள் பைனாப்பிள் பயிர் செய்ய ஏற்றதாகும் என்று கருதப்படுகிறது. தஞ்சை மாவட்டத்தில் யாராவது விவசாயிகள் பயிரிட முன்வந்தால் ஒரு ஏக்கருக்கு 300 ரூபாய் கடன் உதவி கொடுக்கப்படும்.